VETRI

# வள்ளலார் வாக்கில் சிறு விண்ணப்பம்

## சன்மார்க்கம் அறிவோம் - பாடம் 5


### தொகுப்பு

முனைவர் வை. நமசிவாயம், VETRI



### வெளியீடு

வள்ளலார் யூனிவர்சல் மிஷன், U.S.A

மற்றும்

வள்ளலார் கல்விப்  பயிற்சி ஆராய்ச்சி நிறுவனம், வடலூர் (VETRI)

## Contents


வள்ளலார் வாக்கில் சிறு விண்ணப்பம் ........ 3

1. விண்ணப்பம் ........ 3

2. யாரிடம் விண்ணப்பிப்பது? ........ 3

3. வள்ளலார் அருட்பெருஞ்சோதி ஆண்டவராகிய தன் தந்தையிடம் விண்ணப்பிக்கின்றார் ........ 3

4. வள்ளலாரின் விண்ணப்பங்கள் ........ 4

5. சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம் ........ 5

6. விண்ணப்பத்தின் அமைப்பு ........ 5

6.1 கடவுளை விளித்தல் (அழைத்தல்) ........ 5

6.2 விண்ணப்பத்தை கேட்டருள வேண்டுதல் ........ 6

6.3 குறையுடைய உரை என தள்ளிவிடாது ஏற்க வேண்டுதல் ........ 6

6.4 விண்ணப்பங்களிலுள்ள குறைகளை குணங்களாக கொள்ள வேண்டுதல் ........ 7

6.5 உயிர் உணர்ச்சியின்றி இருந்த நிலை (தனிமை நிலை = கேவலம்) ........ 7

6.6 உலகில் பிறப்பு - ஏழு வகை ........ 8

6.7 அறிவின்றி இருந்த பருவம் ........ 8

6.8 திருவருள் உணர்த்தியவை ........ 8

6.9 உணர்த்தப்பட்ட உயிரின் தேடல் ........ 9

6.10 திருவருட் குறிப்பு மூன்று ........ 9

6.11 நித்தியர்களாக்கி வாழ்விக்க வேண்டுதல் ........ 10

6.12 மனத்தில் பற்றக் கூடாதவை ........ 10

6.13 ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை ........ 10

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# வள்ளலார் வாக்கில் சிறு விண்ணப்பம்

## 1. விண்ணப்பம்

- = வேண்டுகோள்
- = முறையிடுதல்
- = குறை தீர்க்க வேண்டுதல்
- = உதவி செய்ய வேண்டுதல்
- = அருள் செய்ய வேண்டுதல்

## 2. யாரிடம் விண்ணப்பிப்பது?

- பிள்ளை தந்தையிடம்
- மாணாக்கர் ஆசிரியரிடம்
- மக்கள் அரசிடம்
- உயிர்கள் கடவுளிடம்

## 3. வள்ளலார் அருட்பெருஞ்சோதி ஆண்டவராகிய தன் தந்தையிடம் விண்ணப்பிக்கின்றார்

- மகன் தந்தையிடம் விண்ணப்பம் செய்வது "ஒழுக்கம்"
- அடியார்களாகிய நாம் ஆண்டவரிடத்தில் விண்ணப்பம் செய்தல் ஒழுக்கம்

### #6-020-070 ஆறாம் திருமுறை / பிள்ளைப் பெரு விண்ணப்பம்

**தரைத்தலத் தெனைநீ எழுமையும் பிரியாத் தம்பிரான் அல்லையோ மனத்தைக்**

**கரைத்துளே புகுந்தென் உயிரினுட் கலந்த கடவுள்நீ அல்லையோ எனைத்தான்**

**இரைத்திவ ணளித்தோர் சிற்சபை விளங்கும் எந்தைநீ அல்லையோ நின்பால்**

**உரைத்தல்என் ஒழுக்கம் ஆதலால் உரைத்தேன் நீஅறி யாததொன் றுண்டோ.**

### #6-020-071 ஆறாம் திருமுறை / பிள்ளைப் பெரு விண்ணப்பம்

**கைதலத் தோங்கும் கனியின் என் னுள்ளே கனிந்தஎன் களைகண்நீ அலையோ**

**மெய்தலத் தகத்தும் புறத்தும்விட் டகலா மெய்யன்நீ அல்லையோ எனது**

**பைதல்தீர்த் தருளுந் தந்தைநீ அலையோ பரிந்துநின் திருமுன்விண் ணப்பம்**

**செய்தல்என் ஒழுக்கம் ஆதலால் செய்தேன் திருவுளம் தெரிந்ததே எல்லாம்.**

## 4. வள்ளலாரின் விண்ணப்பங்கள்

### பாடல் வழி:

**விண்ணப்பக் கலிவெண்பா (417 கண்ணிகளும் வேறு பல பாடல்களும்)**

### உரைநடை நான்கு:

1. சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்
2. சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்
3. சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்
4. சுத்த சன்மார்க்க சங்க சத்தியவிண்ணப்பம்

## 5. சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்

- வள்ளலாரின் திருக்கையால் எழுதப்பட்டது
- முதற் பத்தியில் காணப்படும் 'சிறு  விண்ணப்பங்களை' என்பதே தலைப்பாக அமைந்துள்ளது

## 6. விண்ணப்பத்தின் அமைப்பு

**6.1 கடவுளை விளித்தல் (அழைத்தல்)**

**6.2 விண்ணப்பத்தை கேட்டருள வேண்டுதல்**

**6.3 குறையுடைய உரை என தள்ளிவிடாது ஏற்க வேண்டுதல்**

**6.4 விண்ணப்பங்களிலுள்ள குறைகளை குணங்களாக கொள்ள வேண்டுதல்**

**6.5 உயிர் உணர்ச்சியின்றி இருந்த நிலை (தனிமை நிலை = கேவலம்)**

**6.6 உலகில் பிறப்பு - ஏழு வகை**

**6.7 அறிவின்றி இருந்த பருவம்**

**6.8 திருவருள் உணர்த்தியவை**

**6.9 உணர்த்தப்பட்ட உயிரின் தேடல்**

**6.10 திருவருட் குறிப்பு**

**6.11 நித்தியர்களாக்கி வாழ்விக்க வேண்டுதல்**

**6.12 மனத்தில் பற்றக் கூடாதவை**

**6.13 ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை**

### 6.1 கடவுளை விளித்தல் (அழைத்தல்)

- திருக்குறிப்பு திருவார்த்தைகள் 18
  1. இயற்கை உண்மையரென்றும்,
  2. இயற்கை அறிவினரென்றும்,
  3. இயற்கை இன்பினரென்றும்,
  4. நிர்க்குணரென்றும்,

5. சிற்குணரென்றும்,
6. நித்தியெரென்றும்,
7. சத்தியரென்றும்,
8. ஏகரென்றும்,
9. அநேகரென்றும்,
10. ஆதியரென்றும்,
11. அனாதியரென்றும்,
12. அமலரென்றும்,
13. அருட்பெருஞ்ஜோதியரென்றும்,
14. அற்புதரென்றும்,
15. நிரதிசயரென்றும்,
16. எல்லாமான வரென்றும்,
17. எல்லாமுடைய வரென்றும்,
18. எல்லாம் வல்லவரென்றும்,

- **சுத்த சன்மார்க்க ஞானிகளின் செய்கைகள்**

**"திருக்குறிப்பு திருவார்த்தைகளால் சுத்த சன்மார்க்க ஞானிகள்" துதித்தும், நினைத்தும், உணர்ந்தும், புணர்ந்தும், அனுபவிக்க விளங்குகின்ற "தனித்தலைமை பெரும் பதியாகிய பெருங்கருணைக் கடவுளே!"**

- தனித்தலைமைப் பெரும்பதி

## 6.2 விண்ணப்பத்தை கேட்டருள வேண்டுதல்

**தேவரீரது திருவருட் சமூகத்தில் துரும்பினும் சிறியோமாகிய யாங்கள் சிற்றறிவாற் செய்து கொள்ளும் சிறு விண்ணப்பங்களைத் திருச்செவிக்கேற் பித்தருளி யெங்களை இரஷித்தருளல் வேண்டும்.**

## 6.3 குறையுடைய உரை என தள்ளிவிடாது ஏற்க வேண்டுதல்

**கருணாநிதியாகிய கடவுளே! யாங்கள் விண்ணப்பிக்கின்ற அற்ப வாசகத்தில் உரிமை நோக்காது அங்கீகரித்தருளி யெங்களைக் காத்தருளல் வேண்டும்.**

### 6.4 விண்ணப்பங்களிலுள்ள குறைகளை குணங்களாக கொள்ள வேண்டுதல்

**தாயினுஞ் சிறந்த தயவுடைக் கடவுளே! இயற்கையே அஞ்ஞான விருளில் அஞ்ஞான வுருவில் அஞ்ஞானிகளாய் அஞ்ஞானத்திற் பயின்று ஏதுந் தெரியாது கிடந்த எங்களைத் தேவரீர் பெருங்கருணையாற் பவுதீக உடம்பிற் சிறிதளவு தோற்றி விடுத்த அஞ்ஞான்று தொட்டு இஞ்ஞான்று வரையும், அது கொண்டு அறிவே வடிவாய், அறிவே யுருவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே யறிவாய், அறிவே யனுபவமாய் அனுபவிக்க தெரிந்து கொள்ளாது, குற்றமே வடிவாய்க், குற்றமே யுருவாய்க், குற்றமே பொறியாய்க், குற்றமே மனமாய்க், குற்றமே அறிவாய், குற்றமே அனுபவமாய் அனுபவிக்கின்ற சிறியேங்கள் திருச்சமூகத்தில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பமும் குற்றமே வடிவாய் குற்றமே குறிக்குமென் றறிந்தோமாயினும், குற்றங்குறியாத வகை விண்ணப்பஞ் செய்வதற்கு ஒருவாற்றானு முணர்ச்சி யில்லோ மாதலிற் றுணிவு கொண்டு விண்ணப்பிக்கிறோம். குற்றங்களையே குணங்களாகக் கொள்ளுதல் தேவரீர் திருவருட் பெருமைக்கியற்கையாதலின் இவ்விண்ணப்பங்களிற் குற்றங்குறியாது கடைக்கணித்தருளிக் கருணை செய்தல் வேண்டும்.**

### 6.5 உயிர் உணர்ச்சியின்றி இருந்த நிலை (தனிமை நிலை = கேவலம்)

**தாயினுஞ் சிறந்த தயவுடைக் கடவுளே! இயற்கையே அஞ்ஞான விருளில் அஞ்ஞான வுருவில் அஞ்ஞானிகளாய் அஞ்ஞானத்திற் பயின்று ஏதுந் தெரியாது கிடந்த எங்களைத் தேவரீர் பெருங்கருணையாற் பவுதீக உடம்பிற் சிறிதளவு தோற்றி விடுத்த அஞ்ஞான்று தொட்டு இஞ்ஞான்று வரையும், அது கொண்டு அறிவே வடிவாய், அறிவே யுருவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே யறிவாய், அறிவே யனுபவமாய் அனுபவிக்க தெரிந்து கொள்ளாது, குற்றமே வடிவாய்க், குற்றமே யுருவாய்க், குற்றமே பொறியாய்க், குற்றமே மனமாய்க், குற்றமே அறிவாய், குற்றமே அனுபவமாய் அனுபவிக்கின்ற சிறியேங்கள் திருச்சமூகத்தில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பமும் குற்றமே வடிவாய் குற்றமே குறிக்குமென் றறிந்தோமாயினும், குற்றங்குறியாத வகை விண்ணப்பஞ் செய்வதற்கு ஒருவாற்றானு முணர்ச்சி யில்லோ மாதலிற் றுணிவு கொண்டு விண்ணப்பிக்கிறோம். குற்றங்களையே குணங்களாகக் கொள்ளுதல் தேவரீர் திருவருட்**

பெருமைக்கியற்கையாதலின் இவ்விண்ணப்பங்களிற் குற்றங்குறியாது கடைக்கணித்தருளிக் கருணை செய்தல் வேண்டும்.

அஞ்ஞான விருளில் ஒன்றுந் தெரியா துணர்ச்சி யின்றிக்கிடந்த காலம் போக, அவ்விருளை விட்டு நீங்கிய காலத்தே,

- அறியாமையாகிய மறைப்பில் அறிவின்றிச் சடமாய் இருந்த நிலை (அறியாமை = ஆணவ இருள்)

### 6.6 உலகில் பிறப்பு - ஏழு வகை

1. அசையா உயிர் (புல், நெல், மரம் / கல், மலை, குன்று)
2. ஊர்வன, நீர் வாழ்வன
3. பறவை யோனி வர்க்கங்கள்
4. விலங்குகள்
5. தேவர், பைசாசர்
6. நரகர்
7. மனிதர்

அங்ஙனம் யாங்கள் அப்பிறவிகள் தோறும் அடைந்த அலுப்பும் அச்சமும் களைப்பும் துன்பமும், திருவுளத் தடைத்து இரங்கியருளி அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயரறிவுடைய இம்மனித தேகத்தில் செலுத்தியருளிய தேவரீரது பெருங்கருணைக்கு யாங்கள் செய்யுங் கைமாறு ஒன்றுந் தெரிந்தோமில்லை.

### 6.7 அறிவின்றி இருந்த பருவம்

- தாய் வயிற்றில்
- சிசு (குழந்தை) பருவத்தில்
- குமார (பிள்ளை) பருவத்தில்

### 6.8 திருவருள் உணர்த்தியவை

ஓர் உண்மைக் கடவுள்:

அப்பருவங்கள் கழிய இப்பருவத்தினிடத்தே, எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும், எல்லா பொருட்களையும், மற்றை யெல்லாவற்றையும் தோற்றுவித்தும்,

விளக்கஞ் செய்வித்தும், துரிசு நீக்குவித்தும், பக்குவம் வருவித்தும், பலன் தருவித்தும்(2), எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மையன்பாற் கருத்திற் கருதி வழிபாடு செய்யின் அக்கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்குமென்றும், அத்திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளெல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவுந் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை யடைதல் கூடுமென்றும், எங்கள் அறிவில் தேவரீர் திருவருளால் உண்மைப்பட வுணர்த்தியருளப் பெற்றோம்,

- உணர்த்தப்பட்ட அருளுரை மூன்று

### 6.9 உணர்த்தப்பட்ட உயிரின் தேடல்

1. கடவுள் வழிபாடு எஞ்ஞான்று செய்வோம்?
2. கடவுள் திருவருள் விளக்கம் எந்நாள் அடைவோம்?
3. மரணம், பிணி, மூப்பு, முதலிய அவத்தைகள் எப்போது நீங்கும்?
4. என்று மழியாத பேரின்ப சித்தி எக்காலம் கிடைக்கும்?

### 6.10 திருவருட் குறிப்பு மூன்று

1. களைப்பறிந்துதவுங் கருணைக் கடலாகிய கடவுளே! தேவரீர் நெடுங்காலம் மரண முதலாகிய அவத்தைகளால் துன்பமுற்றுக் களைப்படைந்த உங்களை அவ்வவத்தைகளினின்றும் நீக்கிக் களைப்புங் கலக்கமுந் தவித்து அழியாத பேரின்ப சித்தியை அடைவித்தற் பொருட்டாகவே பூர்வஞான சிதம்பரத்தின் வடபால் பார்வதிபுரமென்று குறிக்கப்படுகின்ற உத்தரஞான சித்திபுரத்தில் யாம் அளவுகடந்த நெடுங்காலம் சித்தியெல்லாம் விளங்கத் திருவருள் நடனம் செய்வோம்
2. அது தருணம் மிகவும் அடுத்த சமீபித்த தருணம்
3. அப்பதியினிடத்தே யாம் அருள் நடனம் புரிதற்கு அடையளாமாக ஓர் ஞான சபைக் காணுதல் வேண்டும்

### 6.11 நித்தியர்களாக்கி வாழ்விக்க வேண்டுதல்

**சர்வ வல்லபராகிய தனித்தலைமை கடவுளே! அத்திருவலங்காரத் திருப்பணி முற்றிய தருணத்தே தேவரீர் அமர்ந்தருளி அற்புதத் திருவருள் விளக்கத்தால் எங்களையும் இவ்வுலகின் இத்தேகத்தை பெற்ற மற்றவர்களையும் உண்மை அடியர்களாக்கி உண்மையறிவை விளக்கி, உண்மையின்பத்தை அளித்து சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்துச் சத்திய வாழ்வை யடைவித்து நித்தியர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.**

### 6.12 மனத்தில் பற்றக் கூடாதவை

**எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பனவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனத்திற் பற்றாதவண்ணம் அருள் செய்தல் வேண்டும்**

### 6.13 ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை

**சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லஷியமாகிய ஆன்மநேய ஒருமைபாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.**

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

திருவருட் பிரகாச வள்ளலார் திவ்ய திருவடிகளே சரணம் ! சரணம் ! சரணம் !

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !
வள்ளல் மலரடி வாழ்க வாழ்க !